பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 31 புதன்கிழமை (16-08-1995) UTHAYAN A lively National Tamil Daily கதிர் 264

# வேலூர் சிறையில் இருந்து 43 ஈழத்தமிழர் தப்பி ஓட்டம்!

## புலிகள் சந்தேக நபர்களாம்

சென்னை, ஒகஸ்ட் 16

வேலூர் திப்புசுல்தான் கோட்டையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த முன்னூறுக்கும் அதிகமான ஈழத் தமிழர்களில் நான்கு பெண்கள் உட்பட 43 பேர் கோட்டைக்கு வெளியே உள்ள அகழி வரை 163 அடி நீள சுரங்கப்பாதை ஒன்றைத் தோண்டி நேற்று அதிகாலை தப்பிச்சென்றனர்.

தப்பிய 43 பேரும் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் எனச் சந்தேகிக்கப்படுவதாக தமிழக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய சுதந்திர தினமான நேற்று அதிகாலையில் ஈழத் தமிழர்கள் பெரும் சிறையுடைப்பு நடவடிக்கையை மேற்கொண்டு சுதந்திரப் பறவைகளாக வெளியே பறந்தனர்.

மாநிலத் தலைநகர் சென்னையிலிருந்து நூறு கிலோமீற்றர் தொலைவில் உள்ள— வட ஆற்காடு அம்பேத்கார்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமானை வெளியேற்ற முயற்சி

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களின் ஆட்சி அதிகாரத்தை புலிகளிடம் ஒப்படைக்க வேண்டுமென தொண்டமான் கருத்து வெளியிட்டதைத் தொடர்ந்து அவரை அமைச்சரவையிலிருந்து வெளியேற்றும் ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக "ஹிரு" வார இதழ் தெரிவிக்கிறது.

## 6 பேர் நேற்று கைதாகினர்; 3 பேர் சயனைட் அருந்தி சாவு

சென்னை, ஓக. 16

வேலூர் சிறையிலிருந்து நேற்று அதிகாலை தப்பிச் சென்றதாகக் கருதப்படும் 43 ஈழத் தமிழர்களில் ஒன்பது பேரை தமிழகப் பொலீஸார் சுற்றி வளைத்துப்பிடித்ததாகவும்—

ஆனால் அவர்களில் மூவர் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டதாகவும்—

சயனைட் உட்கொண்ட மற்றொருவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் —

சென்னை செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

சென்னை மாம்பலத்தில் சைக்கிளில் வந்த இருவரை பொலீஸார் மறிக்க முற்பட்ட சமயம் ஒருவர் சயனைட் உட்கொண்டு மரணமானார். மற்றையவர் தப்பிச்சென்றார்.

சென்னை எழும்பூர் ரயில் நிலையத்தில் நேற்றுக்காலை எட்டுப் பேரை பொலீஸார்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பரவல் யோசனைக்கு இந்தியாவின் பலத்த ஆதரவு

புதுடில்லி, ஓக. 16

ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தமது நாட்டின் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு, வெளியிட்டுள்ள தீர்வு யோசனைக்கு இந்தியா பலத்த ஆதரவு தெரிவித்துள்ளது.

சந்திரிகா வெளியிட்ட தீர்வு யோசனை தனிநாட்டுக் கோரிக்கையை முடிவுக்குக் கொண்டு வரக்கூடிய துணிச்சலான முயற்சியாகும்—என்று வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் அறிவித்தது.

இம்மாதம் மூன்றாம் திகதி ஜனாதிபதி சந்திரிகா தமது யோசனையை வெளியிட்ட பின்னர், இந்தியத் தரப்பில் கடந்த வெள்ளிக்கிழமையே முதல் தடவையாக கருத்து வெளியிடப்பட்டதாகவும் ஏ.எவ்.பி. தனது செய்தியில் குறிப்பிட்டுக் கூறியது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் வகையில் கொழும்பு அரசு வெளியிட்டுள்ள அதிகாரப்பரவல் யோசனையை இந்திய அரசு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதா பதவி விலக காங்கிரஸ் வற்புறுத்தல்

சென்னை, ஓக. 16

வேலூர் சிறையில் இருந்து புலிகள் சந்தேகநபர்கள் தப்பிச் சென்றதை யடுத்து மாநிலத்தில் சட்ட ஒழுங்கு நிலைமை கெட்டு விட்டதற்கு பொறுப்பேற்று, முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ராஜினாமா செய்ய வேண்டும்.

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் குமரி அனந்தன் இவ்வாறு கேட்டுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு கருதி மத்திய அரசு உடனே வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரினார்.

இச்சம்பவத்துக்குப்பொறுப்பேற்று தமிழக முதல்வர் ஜெயலலிதா பதவி விலக வேண்டும் என்று தமிழக எதிர்க்கட்சித் தலைவரும் காங்கிரஸ் பிரமுகருமான எஸ்.ஆர். பாலசுப்பிரமணியமும் கோரிக்கை விடுத்தார்.

விடுதலைப் புலிகள் தமிழகத்தில் ஊடுருவுவது குறித்து அபாயக் குரல் எழுப்பியவர்களுக்கு தப்பி ஓடிய இவர்களால் பேராபத்து ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (உ-8)

## அரச அதிபர் பெயரில் உணவுடன் வந்த கப்பலில் படையினருக்கு பஜிரோ

யாழ்ப்பாணம், ஓக. 16

யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கு விநியோகிப்பதற்கென, யாழ். அரசஅதிபருக்கு அனுப்பட்ட உணவுப்பொருள்களுடன் —

பலாலியில் உள்ள படையினருக்கு மூன்று "பஜிரோ" ஜீப் வாகனங்களும் எடுத்து வரப்பட்டமை — இப்போது அம்பலத்துக்கு வந்துள்ளது!

கடந்த மாதம் 14 ஆம் திகதி காங்கேசன்துறைக்கு வந்த "லங்கா முடிதா" கப்பலிலேயே மக்களுக்கு உரிய உணவுப் பொருள்களுடன் படையினருக்கான வாகனமும் ஏற்றி வரப்பட்டிருக்கிறது.

"முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கை மூலம் தாம் ஆக்கிரமித்த பகுதிகளில் உள்ள மக்களுக்கு விநியோகிப்பதற்கென்று—

இதே கப்பலில் இருந்தே படையினர் 250 மெற்றிக்தொன் உணவுப் பொருள்களை பறித்தெடுத்திருந்தனர்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கச்சதீவுக்கு மேலதிக கடற்படைக் கப்பல்

கொழும்பு, ஓக. 16

கச்சதீவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கச்சதீவிலும் அதன் சுற்றுப் பகுதியிலும் கண்காணிப்பில் ஈடுபட இலங்கைக் கடற்படை மேலதிக கடற்படைக் கப்பல் ஒன்றையும் ஆயுதம் தாங்கிய படையினரையும் சேவையில் ஈடுபடுத்தி உள்ளது என பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேவை ஏற்படும் பட்சத்தில் கடற்படையினருக்கு உதவ பொலீஸ் மற்றும் இராணுவத்தினர் அடங்கிய குழு ஒன்றும் அங்கு விரைந்துள்ளது.

அவசியம் ஏற்படும் வரை மேலதிக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்ந்து அமுலில் இருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவையின் பாதுகாப்பு இன்றி கப்பல்களை அனுப்ப அரசு முயற்சி

கொழும்பு, ஓக. 16

வடபகுதிக்கு உணவுப் பொருள்களை ஏற்றிவரும் கப்பல்களுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வதில் இணக்க நிலை ஏற்படாவிட்டால் —

செஞ்சிலுவைப் பாதுகாப்பு இன்றி உணவுக் கப்பல்களை வடக்கே அனுப்பும் திட்டம் ஒன்றை அரசு ஆலோசித்து வருவதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை மேற்கோள்காட்டி கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

ஆனால் —

ஸ்ரீலங்கா அரசின் கப்பல்கள் உணவுப் பொருள் ஏற்றிவரும் சாக்கில், மறைமுகமான வேறு படை நடவடிக்கைகளில் ஈடுபடலாம் எனப் பலமாகச் சந்தேகிக்கப்படுவதால் இந்த முயற்சிக்கு வடபகுதியிலிருந்து ஒத்துழைப்பு கிடைக்கமாட்டாது எனத் தெரியவருகின்றது.

இதற்கிடையில்—

யாழ். மாவட்டத்தில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் கையிருப்பு மோசமான கட்டத்தை அடைந்திருப்பது குறித்து, யாழ். திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் கொழும்பில் உள்ள யாழ். அரச அதிபருக்கு நேற்று அவசரச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்தார்.

குடாநாட்டில் இடம்பெயர்ந்த 56 ஆயிரம் குடும்பங்களுக்கும் இரு மாத கால

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கச்சதீவுக்கு புறப்பட்ட வேளை ராமதாஸுடன் 500 பேர் ராமேஸ்வரத்தில் கைது

சென்னை, ஓக. 16

பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ். ராமதாஸ் மற்றும் அவரது கட்சியைச் சேர்ந்த 500 பேர் நேற்று ராமேஸ்வரத்தில் கைது செய்யப்பட்டனர்.

கச்சதீவில் இந்தியத் தேசியக் கொடியை ஏற்றும் நோக்குடன் புறப்பட்டபோது இவர்கள் கைதானார்கள்.

முன்னதாக, இவர்கள் கச்சதீவை மீண்டும் இந்தியா பெற வேண்டும் என்றும் இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைக் கண்டித்தும் கோஷமிட்டபடி ஊர்வலமாகச் சென்றார்கள்.

# நவாலி குண்டு வீச்சில் பலியானோரில் 51 பேர் வலி. மேற்கு பகுதி மக்கள்

வலி.மேற்கு, ஓக. 16

முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையின் போது நவாலி சென் பீற்றர் தேவாலயப் பகுதியில் இடம் பெற்ற புக்காரா குண்டு வீச்சில், வலி. மேற்குப் பிரதேசத்தைச் சேர்த்தவர்களில் மட்டும் 51 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தில் மொத்தம் 98 பேர் பலியாகியுள்ளனர்.

சுழிபுரம், தொல்புரம், சங்கானைப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து சென்ற சமயமே இவர்கள் குண்டு வீச்சில் சிக்கி உயிரிழந்தனர்.

சுழிபுரத்தைச் சேர்ந்த 30 பேரும், தொல்புரத்தைச் சேர்ந்த 13 பேரும், சங்கானையைச் சேர்ந்த 7பேரும், மூளாயைச் சேர்ந்த ஒருவரும் அதே இடத்தில் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட சுழிபுர வாசிகளின் விவரம்.

நா. கோபாலகிருஷ்ணன் (வயது 28), கோ. மதிவதனா (வயது 23), கோ. பிரதீபா (வயது 3), கோ. ரூசியந்தன் (வயது 1), சி. மகேந்திரா (வயது 25), ம. வசந்தகுமாரி [வயது 24), க. சித்திரபாலு (வயது 51), சி. நாகேஸ்வரி (வயது 44), சி. ஜெயமதி [வயது 27], சி. பிரபாகரன் [வயது 21], சி. தனேஸ்வரி [வயது 17], சி. ஜெயபாலினி (வயது 14] பு. சயந்தன் (வயது 9) இவர்கள் 13பேரும் ஒரே குடும்பத்தைச் சேர்தவர்களில்.—

சி. சண்முகானந்தன் (வயது 23,) ச. பராசக்தி (வயது 26), ப. இந்திரகுமார் (வயது 19). ஆ. குணரத்தினம் (வயது 40), கு. ரோகினி[வயது 32), கு. தர்சினி (வயது 14), கு. பிரணவன் (வயது 06), கு. விதுஷன் [வயது 01), இந்த ஐந்து பேரும் ஒரே குடும்பதிதைச் சேர்ந்தவர்கள்

ந. ரவி [வயது23], த.பாஸ்கரன் (வயது 18], க. ஞானசேகரம் (வயது 17), பா. செல்லம்மா [வயது 36], கா. தவச்செல்வி [வயது 10], க. நல்லையா (வயது 55). அவரது மனைவி க. நீலாவதி [வயது 50], மற்றும் க.உஷானந்தன் (வயது 13), சி. ரஞ்சினி (வயது11),

கொலப்பட்ட தொல்புர வாசிகளின் விவரம் —

மா. சிதம்பரம் (வயது 70), சி. மகேஸ்வரி (வயது 26), தா. பரமேஸ்வரி வயது 63), ஜெ. விமலாதேவி (வயது 42) அவரது பிள்ளைகளான ஜெ. ஜெயசுதா (வயது 19), ஜெ. ரதிமலர் (வயது 17), மற்றும் மா. செல்வநாயகி [வயது 53) அவரது மகன் மா. ஆனந்தமுகன் (வயது 16), மற்றும்—

க. சரஸ்வதி (வயது 57), க. சுபாகரன் [வயது 22], க. வசீகரன் (வயது 18), க. கலாதீபன் (வயது 06), த. தற்சுதன் (வயது 10)

கொல்லப்பட்ட சங்கானை வாசிகளின் விவரம்:

பொ. உதயகுமார் (வயது 35), அவரது பிள்ளைகளான உ. சதீஸ்குமார் (வயது 19] உ. உசாந்தினி [வயது 12,) மற்றும் பொ. நாகமுத்து (வயது 75), சி. சுரேக்கா (வயது 12), ஐ. பவனம் (வயது 75) க. துரைராசா (வயது 56),

மூளாயைச்சேர்ந்த க. தேவகுலசிங்கம் (வயது 36) என்பவரும் கொல்லப்பட்டவர்களாவர்.

இவர்களுள் 13 பேர் மாணவர்கள். [ஓ-175]

# வெண்தாமரை இயக்கம் போருக்கு நிதி சேகரிப்பு

## ஸ்ரிக்கரும் விற்கிறது

கொழும்பு, ஓக. 16

நாட்டில் சமாதானமும் சுபிட்சமும் நிலவுவதற்கான பிரசார இயக்கம் என்று கூறி ஆரம்பிக்கப்பட்ட வெண்தாமரை இயக்கம் தற்போது யுத்தத்திற்கு நிதி சேகரிப்பதற்காக 250 ரூபாவுக்கு ஸ்ரிக்கர்களை விற்பனை செய்து வருகிறது.

இந்த இயக்கம் அண்மையில் பாணந்துறையில் பாதயாத்திரை ஒன்றை மேற்கொண்டது.

இந்தப் பாத யாத்திரையில், இந்த இயக்கத்தின் அமைப்பாளரான அமைச்சர் மங்கள சமரவீரவுடன் அராலித்துறை கண்ணி வெடியில் கொல்லப்பட்ட மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் மனைவி, லாலி கொப்பேகடுவவும் கலந்து கொண்டார்.

சிங்கள மொழியில் ''சுதுநெலும்'' எனப்படும் இந்த இயக்கத்தை ''சுத்து மாத்து நெலும் இயக்கம்'' என கொழும்புப் பத்திரிகை ஒன்று தொடர்ந்து வர்ணித்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ-எ)

# 6 மாத வளர்ப்பு நாய் கடித்து பெண் மரணம்

அளவெட்டி, ஓக. 16

வளர்ப்பு நாய் கடித்ததையிட்டு கவனக் குறைவாக இருந்த பெண் ஒருவர் சுமார் ஒரு மாதத்தின் பின் ஏற்புவலி ஏற்பட்டு மரணமானார்.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது;-

இளவாலையில் இருந்து இடம்பெயர்ந்து, சண்டிலிப்பாயில் வசித்து வந்த ஆறுமுகம் புவனேஸ்வரி (வயது 38] என்ற பெண்ணுக்கு கடந்த மாதம் 8 ஆம் திகதி அவரது ஆறு மாதமே நிரம்பிய வளர்ப்பு நாய் கடித்தது

அதற்கு அவர் ஏற்பூசி ஏற்றிக் கொண்டார்.

மறுநாள் இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகியதனால் அவர் யாழ்ப்பாணத்திற்கு இடம்பெயர்ந்து வந்தார்.

வரும் போது தனது நாய்க்குட்டியை விட்டு விட்டு வந்து விட்டார்.

அதனால் அந் நாய்க்குட்டி பற்றிய விவரம் எதுவும் அவருக்கு தெரிய வரவில்லை.

இங்கு வந்த பின்பும் அவர் விசர் நாய்க்கடி தடுப்பு ஊசி (ஏ. ஆர். வி,) போட்டு கொள்ளவில்லை.

அதன் பின் கடும் சுகவீனம் அடைந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அன்றிரவே அங்கு மரணமானார். [எ-18]


**யாழ்ப்பாணக் கல்லூரி**
**விவசாய நிறுவனம்**
**மருதனார்மடம், சுன்னாகம்**

எமது நிறுவனத்தால் நடத்தப்படும் சகல விவசாய பயிற்சி நெறிகளுக்குமான விரிவுரைகள் **07 - 08 - 1995** முதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன என்பதை மாணவர்களுக்கு அறியத்தருகின்றோம்.

— அதிபர்

(38050)


## முக்கிய அறிவித்தல்

வலி. தெற்கு பிரதேச சபை
**சுன்னாகம், உடுவில் நூலகங்களின்**
**புத்தகங்கள் மீளளித்தல்**

வலி. தெற்கு பிரதேசசபை, சுன்னாகம், உடுவில் பொது நூலகங்களிலிருந்து புத்தகங்களை இரவல் பெற்றுச் சென்ற அங்கத்தவர்கள் தற்போதைய நாட்டு நிலைமை காரணமாக தம்மிடம் உள்ள புத்தகங்களை உடனடியாக அந்தந்த நூலகங்களில் திருப்பி ஒப்படைத்து தமது அங்கத்துவ அட்டைகளை, பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்

வலி. தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
15 - 08 - 95

[சி-2057]

# வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 16

''யாழ்ப்பாணப் புவியியலாளன்'' வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

புவியியற் கழகத் தலைவர் செல்வன் ஆ ன ர ன் வ்ரெனி நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார். கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வாழ்த்துரை வழங்குவார்.

முதற் பிரதியை 'ஈழநாதம்' ஆசிரியர் திரு. பொ. ஜெயராஜ் பெறுவார். (ஓ)

# அதிபர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 16

சங்கானைக் கல்விக்கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு வட்டு. இந்துக் கல்லூரியில் நடைபெறும். அனைத்து அதிபர்களையும் கலந்துகொள்ளுமாறு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்னேஸ்வரன் கேட்டுள்ளார். (ஓ)

# தோட்டத்துக்கு நீரிறைத்து அறுவடை செய்த திருடர்

## அளவெட்டிப் பகுதியில் சம்பவம்

அளவெட்டி, ஓக. 16

தமது தோட்டங்களைப் பார்வையிட அளவெட்டிப் பகுதிக்குச் சென்ற பலர் ஏமாற்றம் அடைந்தனர்.

தாம் ஏற்கனவே பயிரிட்டிருந்த மரவள்ளி, வெங்காயம் ஆகியவற்றையும் வாழைகளையும் பார்க்க சமீபத்தில் இவர்கள் அளவெட்டிப் பகுதிக்குச் சென்றிருந்தனர்.

ஆனால் அங்கு அவர்களுக்கு ஏமாற்றமே காத்திருந்தது. பலரது தோட்டங்களில் ஏற்கனவே தண்ணீர் இறைக்கப்பட்டிருந்தது. அத்துடன் வெங்காயம், மரவள்ளி ஆகியவையும் அறுவடை செய்யப்பட்டிருந்தன. வாழைத் தோட்டங்களில் வாழைக் குலைகளும் பக்குவமாக வெட்டப்பட்டிருந்தன.

தமது தோட்டங்களுக்கு தண்ணீர் இறைத்து அறுவடையும் செய்யலாம் என்று சென்றவர்கள் வெறும் கையுடன் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

ராணுவம் தாம் பிடித்து வைத்திருக்கும் பொது மக்களைக் கொண்டு இந்த திருட்டை நடத்தி இருக்கலாம் அல்லது உள்ளூர் திருடர்களின் வேலையாக இருக்கலாம் என்று அங்கு சென்று திரும்பியவர்கள் தெரிவிக்கின்றனர். (இ-13)

# பொலீஸைவிட மோசமாக நடக்கும் ஊர்காவலர்கள்

## மேயரையும் சோதனையிட முயற்சி

கொழும்பு, ஓக. 16

திருகோணமலையில் சோதனை நிலையங்களில் பொலீஸாருடன் இணைந்து மக்களைச் சோதனையிடும் ஊர்காவல் படையினர் பொலீஸாரை விடமிக மோசமாக நடந்து கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலைத் துறைமுகத்துக்கு உள்பக்க வீதியில் தாங்களாகவே ஒரு காவலரணை அமைத்து மாலை வேளைகளில் அவ் வீதியால் வருவோர் போவோரை இவர்கள் சோதனையிட்டு வருகின்றனர்.

இவர்கள் வேட்டைக்காரர்கள் போல் துப்பாக்கிகளை சுழற்றியபடி அக்காவலரண் பிரதேசத்தில் சுற்றி வருன்றனர் என கொழும்புப் பத்திரிகை ஒன்று வர்ணித்துள்ளது.

இந்த ஊர்காவலர்கள் சமீபத்தில் திருகோணமலை நகர மேயர் திரு. சூரியமூர்த்தியையே சோதனையிட முயன்றனர் என்றும்—

பின்னர் அருகில் நின்ற பொலீஸார் மேயரிடம் மன்னிப்புக் கேட்டு, அவரை போக அனுமதித்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

# சிறப்பாக நிறைவேறிய தமிழீழ ஆடிவேல் விழா

யாழ்ப்பாணம், ஓக. 16

கடந்த 11 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் நடைபெற்ற தமிழீழ ஆடி வேல் விழா, மிகவும் பக்திபூர்வமாக நிறைவெய்தியது.

கடந்த 11ஆம் திகதி காலை 8 மணிக்கு ஸ்ரீ பாலகதிர்காம தேவஸ்தானத்தில் இருந்து, பக்தர்கள் புடைசூழ, மந்திர உச்சாடனங்கள், பக்திப் பண்ணிசையுடன் ஆரம்பமான ரத பவனி,—

வீரமாகாளி அம்மன் ஆலயம், வண்ணைச்சிவன்கோவில் வண்ணை நாச்சிமார் அம்மன் ஆலயம், கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலயம், அரசடி சிவகாமி அம்மன் ஆலயம், ஊடாக மீண்டும் 13 ஆம் திகதி ஆலயத்தை வந்தடைந்தது.

ரதபவனி ஆரம்பமாவதற்கு முதல் நாள் மாலை 5.30 மணிக்கு பாலகதிர்காம தேவஸ்தானத்தில் ஆடி வேல் விழாவுக்கான "நவவீரர்" வெள்ளோட்ட விழாவும், தொடர்ந்து சிற்பக் கலைஞர்களைப் பாராட்டி, கௌரவிக்கும் நிகழ்வும், பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் சிறபக்கலைஞர், மயிலிட்டி ''சித்துஜா சிற்பக் கலைக்கூடம்'' ஆசாரியார் திரு த ஸ்ரீதரனுக்கு நவவீரர் சிற்பபானு எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (இ-111)

# ஒக. 1 முதல் வட்டி வீதம் இலங்கை வங்கி அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக 16

இலங்கை வங்கி ஒகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் நிலையான வைப்புக்களுக்கு இரண்டரை வீதத்தாலும் சேமிப்புச் சான்றிதழுக்கு ஒரு வீதத்தாலும் வட்டியை அதிகரித்துள்ளது.

இது குறித்து யாழ்ப்பாணப் பிரதேச முகாமையாளர் வாடிக்கையாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

வட்டி வீதம் கீழ்க்கண்டவாறு அமைந்திருக்கும்.

சேமிப்புச் சான்றிதழ் —

6 மாதங்கள் 13.50 வீதம், 12 மாதங்கள் 14 வீதம்,

நிலையான வைப்புக்கள்—

12 மாதங்கள் முதிர்வின் பின் 15 வீதம் மாதாந்தம் 14.05 வீதம்

6 மாதங்கள் — முதிர்வின் பின் 11.50வீதம் 3மாதங்கள் முதிர்வின் பின் 11வீதம் ஒரு மாதம்1.5 மில்லியன் அதற்கு மேலும் 10.50 வீதம். [ஓ]

## வை. எம். சீ. ஏ. உதவி

யாழ்ப்பாணம், ஓக. 16

வடபிராந்திய வாலிப கிறிஸ்தவ சங்கங்களின் ஒன்றியம் ''முன்னேறிப் பாய்தல்'' ராணுவ நடவடிக்கையின் போது நிகழ்ந்த விமானத் தாக்குதல், ஷெல் தாக்குதல் முதலியவற்றால் அகாலமரணமானவர்களின் குடும்பங்களுக்கு உதவிப் பணமாக ரூபா 500 வழங்கி வருகிறது.

இது பற்றிய தகவல்களையும் விண்ணப்பப்படிவங்களையும் அண்மையில் உள்ள வை. எம். சீ. ஏ. யில் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-20)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின்

## கப்டன் கலைஞன் - பிரிக்கலைஞன்

(குணவீரசிங்கம் மதனகுமார்)

மாதா மடியினில் மழலையாக: 13 - 01 - 1975

மண்டைதீவு மண்ணில் மாவீரனாக: 27 - 07 - 1994

திதி: இன்று 16 - 08 - 1995

"புகழுடம்பாய் நான் வந்தால் புலிக்கொடியால் எந்தனைப் போர்த்து விடுங்கள்"
என்று சொல்லித் தாயக மீட்பு வேள்வியில் குதித்த
அன்பு மைந்தனே........ மதனே!

உங்கள் புகழுடல் எமதில்லம் வந்தும், புலிக்கொடியினால் உங்களைப் போர்த்திடக் கொடுத்து வைக்காத பாவிகளாக அப்பாவும், அம்மாவும் அக்கரையில் நின்று அல்லலுற்றோமே ...... ஆற்றுவார். யாருளர்?

இன்று [16-08-95] புதன்கிழமை எமதில்லத்தில் நடைபெறும், எமதன்புச் செல்வம் மதனகுமார் அவரவின் ஆண்டுத் திவச நிகழ்வினில் கலந்து அவரினதும் ஏனைய மாவீரர்களினதும் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும் வண்ணம், உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் ஏனைய மாவீரர் குடும்பங்கள் அனைவரையும் பாசமுடன் அழைக்கின்றோம்.

"மதனில்லம்"
மணல் வீதி,
மட்டுவில் மத்தி,
சாவகச்சேரி.

- குடும்பத்தினர்.

([37999)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

குறைந்த விலையில் தேவையான அளவு இரண்டாம் தரத் தேங்காய்ப் பிண்ணாக்கு விற்பனைக்குண்டு. தொடர்பு: K. வீரசிங்கம், முருகன் எண்ணெய் ஆலை, மருதடி மேற்கு, சாவகச்சேரி. [38022]

AIR Compressure Tank, Welding Plant விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நவரத்தினம், மட்டுவில் தெற்கு, உபதபாற் கந்தோர் முன் கடை, சாவகச்சேரி. [38033]

## மலிவு விற்பனை

ஆகஸ்ட் - 07 தொடக்கம் மருத்துவ, விஞ்ஞான வணிகத்துறைகளை சேர்ந்த ELBS நூல்களும், இதர நூல்களும் மலிவு விலையில் விற்கப்படும். யாழ்ப்பாணப் புத்தக நிலையம், 448, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். [சி-1725]

## தேவை

புதிய பழைய பாவனைக்கு உதவாத தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் மற்றும் றோணியோ இயந்திரங்கள் தேவை. மருதம், 66, மணிக்கூட்டு கோபுர வீதி (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம். [38011]

வெற்று ஜாம் (Jam) போத்தல்கள், பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய வீவா, ஹோர்லிக்ஸ் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-1967)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

அரியரத்தினம் யோன் ராஜ்குமார் என்பவருக்குடைய ஆட்டை [இல. 682963409V] ஒரு தொகைப் பணத்துடன் பேர்ஸ் என்பன கைதடிப் பாலத்தடியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்: திரு. க. பத்மநாதன் மே/பா க. யோகநாதன், மல்வம் உடுவில் எனும் முகவரியில் சான்றைக் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். (38012)

## வைபவ மாலை

யாழ்ப்பாண வைபவ மாலை ஆக்கம்: முதலியார் குல. சபாநாதன் பல பிரதிருபங்களைக் கொண்டு பரிசோதித்து எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் விலை 50/- விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம், நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு எமது ஸ்தாபனம் நல்லூர் சிவன்கோயில் அருகில் திறக்கப்பட்டுள்ளது. [சி-2036]

## ஆனந்தம் சீயாக்காய்

சுதேச வைத்திய சங்க தலைவர் வைத்திய கலாநிதி S. சபாநாதன் அவர்களின் சிபார்சுப்படி சிரசு, உடல், தனித்துவத்தை பேணுமுகமாக தயாரிக்கப்பெற்றது ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர். தொடர்ந்து பாவிப்பதன் மூலம் சிரசு, உடலில் சித்த மருத்துவ மூலிகைகள் ஏற்படுத்தும் உற்சாகத்தை உணர முடியும். இன்றே பாவிக்க ஆரம்பியுங்கள் ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர். (சி-1723)

## ENGLISH LANGUAGE

Tuition for O/L Years 8, 9&10 by Experienced B. Sc. Part time English Teacher can visit homes. Write to: No. 824, C/o Uthayan, Jaffna. (38035)

## சீயாக்காய்ப் பவுடர்

இப்போது காவேரி சீயாக்காய்ப் பவுடரில் கருசளாங்கண்ணி என்னும் மூலிகை சேர்த்துத் தயாரிக்கப்படுவதால் உங்கள் கூந்தல் கருமை நிறமாகவும் நீண்டு வளரக் கூடியதாகவும் உதவுகிறது. சீயாக்காய் பவுடர் என்று கேட்காமல் காவேரி சீயாக்காய் பவுடர் என்று கேட்டு வாங்கிப் பாவியுங்கள். (37851)

## உயர்தர விலங்கியல்

உயர்தர விலங்கியல் A/L மாதிரி வினாத்தாள் - 10 M.C.Q. மட்டும் 10 மாதிரி கட்டமைப்பு, கட்டுரை வரைக. வினாக்களும் விடைகளும் விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-2000]

# யாழ். ஆஸ்பத்திரி எக்ஸ்-றே பிரிவின் செயற்பாடு மட்டுப்படுத்தப்பட்டது

### பகலில் 4 மணி நேரம் மட்டும் இயங்குகிறது

யாழ்ப்பாணம், ஒக. 16

யாழ். ஆஸ்பத்திரியில் எக்ஸ்-றே பிரிவின் செயற்பாடு மேலும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

எரிபொருள் பற்றாக்குறையின் காரணமாக மின்சாரப் பாவனை மட்டுப்படுத்தப்பட்டதை அடுத்தே எக்ஸ்-றே பிரிவின் செயல்பாட்டு நேரமும் குறைக்கப்பட்டுள்ளது.

இதுவரை இரவு நேரத்திலும் எக்ஸ்-றே எடுக்கப்பட்டு வந்தது.

ஆனால் தற்போது பகலில் மாத்திரம் காலை எட்டு மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நான்கு மணித்தியாலங்கள் மட்டுமே எக்ஸ்-றே பிரிவு இயங்க வைக்கப்படுகிறது.

அத்தியாவசிய தேவைகள் இருந்த போதிலும் இரவு நேரத்தில் எக்ஸ்—றே எடுப்பது நிறுத்தப்பட்டுள்ளது.

பகலிலும் அவசரம் எனத் தெரியும் எக்ஸ்—றேக்களே எடுக்கப்படுகின்றன.

இதேபோலவே கிருமி அகற்றும் பிரிவின் செயற்பாடும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது இரவு நேரத்தில் இதன் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன.

பகலிலும் ஒரு நாளைக்கு ஒரு மணித்தியாலம் மட்டும் அதுவும் இரண்டு நாட்களுக்கு ஒரு தடவையே அது இயங்கி வருகிறது. (இ-15)

## நல்லூர் சூழலில் இன்று

கொழும்புத்துறை, ஒக 16

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் பதினாறாம் நாள் திருவிழாவான இன்று ஆலயச் சூழலில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள்:-

★ நாவலர் மணி மண்டப முன்றிலில்

மாலை 6 மணி முதல் 7மணி வரை பிரசாந்தி- ராமச்சந்திரன் பாட்டு.

7 மணி முதல் 8 30 மணி வரை திரு. வி. செல்வத்துரை பாட்டு.

★ நல்லை ஆதீன கலாமண்டபத்தில் சைவசித்தாந்த நோக்கிலான ஒழுங்குகளும், பயிற்சி வகுப்புகளும் காலை 8-30 மணி முதல 12 மணி வரை

பண்டிதர் மு. கந்தையா ''மங்கலக் கிரியைகள்'' [வீடு கட்டுதல், குடிபுகுதல்] முதலானவை.

திருமதி நாச்சியார் செல்வநாயகம் ''மங்கலக் கிரியைகள் திருமணம்''

★ நல்லை ஆதீன குருமூர்த்த ஆலயத்தில்

பி.ப 3மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் சமயப் பேருரை ''திருவாசகம்''

★ மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயமண்டபத்தில்

மாலை 5-30 மணிக்கு பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவின் 'விஷ்ணுபாகவதம்' தொடர் இசைப் பேருரையில் ''ராஜரிஷி''.

[எ-30-111[

## புலிகளின் குரல் வானொலியில்

### 16 – 08 – 1995

#### புதன் இரவு

★ 8-02 — குயிலோசை நிகழ்ச்சியில் வேலணையூர் சுரேஸ் எழுதிய ''இந்தமண் எதிரிக்குப் பணியாது'' கிராமிய நிகழ்வு.
★ 8-20 — வாத்தியகானங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — நாடகம் தமிழ்க்கவி எழுதிய ''வெளிப்பு''

### 17 – 08 – 1995

#### வியாழன் காலை

★ 7-02— மாவீரவணக்கம்
★ 7-15 — விடுதலை கீதங்கள்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-45 — விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

#### புதன் மாலை

★ 5-01—சிந்தனைச்சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — படப்பாடல்கள்
★ 5-30 — அறிவூற்று
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — உங்கள் தெரிவு
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — உங்கள் தெரிவு நிகழ்ச்சியின் தொடர்ச்சி


உ

முருகன் துணை

கொக்குவில்

மாத்தனைக் கந்தசுவாமி கோவிற் பரிபாலனசபை

## குருக்கள் தேவை

மேற்படி கோவிலுக்கு நித்திய பூசை செய்வதற்கும் மற்றும் நைமித்திக, காமிய கிரியைகள் செய்வதற்கும் தகுதியுள்ள சிவாச்சாரியார் தேவை. வதிவிட வசதியும் உண்டு. தகுதி உடையோர் 21-8-1995க்குப் பிந்தாமல் எழுத்துமூலம் போதிய நற்சான்றுகளுடன் சபைத் தலைவருக்கு விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பித்தவர்கள் 23-8-1995 புதன்கிழமை காலை 9 மணிக்கும் — 12 மணிக்கும் இடையில் கோவில் அலுவலகத்தில் சமுகம் தரவும்.

இங்ஙனம்
பரிபாலனசபை.

சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். [38036]


## நினைவஞ்சலி

2ஆம் ஆண்டு | 3ஆம் ஆண்டு



அமரர்
தில்லையம்பலம் சிவசுப்பிரமணியம்
[விவசாய உத்தியோகத்தர் பொலன்னறுவை]

மலர்வு: 26-06-1943
உதிர்வு: 08-08-1993



திருமதி
சிவசுப்பிரமணியம் புஸ்பராணி
(யாழ் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ் கல்லூரி பழைய மாணவி]

மலர்வு: 20-05-1944
உதிர்வு: 15-04-1992

எத்தனை ஆண்டுகள் போனாலும் உங்கள் நினைவு நீங்கள் காட்டிய அன்பு, அறிவுரைகள் எம் நெஞ்சை விட்டு அகலாதவை.

பாசமிகு பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

அச்செழு,
நீர்வேலி. [38048)


தனியார் கல்வி நிறுவனங்களுக்கான

## விசேட பொதுக்கூட்டம்

**வலிகாமப் பிரிவினருக்கு**
[யாழ். மருதனார்மடம், பண்டத்தரிப்புக் கோட்டம்]
இடம்: நியூ மாஸ்ரர் கல்வி நிலையம் [எழிலகத்திற்கு அருகில்]
காலம்: இன்று(16 - 08 - 95) புதன்கிழமை காலை 10.00 மணி

**தென்மராட்சிப் பிரிவினருக்கு:**
இடம்: அமிர்தாம்பிகை வித்தியாலயம், கண்டி வீதி, சாவகச்சேரி.
காலம்: இன்று (16 - 08 - 95) புதன்கிழமை பி. பகல் 2.00 மணி.

**வடமராட்சிப் பிரிவினருக்கு:**
இடம்: சதா பொன்ஸ் கல்வி நிலையம்
காலம்: இன்று( 16 - 08 - 95) புதன்கிழமை பி. பகல் 4.30 மணிக்கு

விடயம்:
தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதி சேகரிப்பு தொடர்பான கலந்துரையாடல்

குறிப்பு:
மேற்படி கூட்டத்திற்கு நிறுவன உரிமையாளர்கள், பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்கள், நிர்வாகிகள், ஆசிரியர்கள், ஊழியர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொண்டு ஒத்துழைக்குமாறு மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

★ நன்றி ★

தனியார் கல்வி நிர்வாகப் பிரிவினர்

(சி/ 2055)

# உதயன்

29/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## லண்டன் பேரணி

ஸ்ரீலங்காவில்— கொழும்பில் — சந்திரிகா வெளியிட்ட இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனைக்கு எதிராக பிரிட்டனில் — லண்டனில் —ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றிருக்கிறது.

அந்தப் பேரணியை நடத்தியவர்கள் லண்டன் வாழ் தமிழர்கள்அல்லர். அங்கு வாழும் சிங்களவர்கள் சேர்ந்தே சந்திரிகா அரசுக்கு எதிரான பேரணியை நடத்தியிருக்கிறார்கள். ஸ்ரீலங்கா அரசு ஒன்றுக்கு எதிராகச் சிங்களவர்கள் சேர்ந்து வெளிநாடு ஒன்றில் நடத்தியிருக்கும் முதலாவது கண்டனப் பேரணி இதுவாகவே இருக்கும்.

சிங்கள அரசைக் கண்டித்து சிங்களவர்கள் பேரணி நடத்தும் புதிய போக்கு இப்போதுதான் உதித்திருக்கிறது. இனிமேல் இது தொடரலாம்; அடிக்கடி நடைபெறலாம்.

சந்திரிகாவின் தீர்வு யோசனை தமிழர் பிரச்சினைக்கு இனியில்லை என்ற உகந்த, நியாயமான, பொருத்தமான திட்டம் என்று பிரிட்டன், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள், வெளிநாடுகள் நம்பிக் கொண்டிருக்கின்றன; நம்ப வைக்கப்பட்டுள்ளன. அதனாலேயே அந்த நாடுகள் ஸ்ரீலங்கா அரசின் போருக்கு உதவும் வகையில் ஆயுதம் மற்றும் இராணுவ உதவிகளை வழங்க முன்வந்திருக்கின்றன.

சந்திரிகா அரசு குறித்தும், தீர்வு யோசனை குறித்தும் வெளிநாடுகள் கொண்டுள்ள கருத்துத் தவறானது என்பதனைச் சுட்டிக்காட்டும் பொருட்டுத் தமிழர்களே ஆர்ப்பாட்டப் பேரணிகளை வெளிநாடுகளில் நடத்த வேண்டும்.

சிங்களவர்கள் இது விடயத்தில் முந்திக் கொண்டதை இரண்டு கோணங்களில் பார்க்கலாம்.

தீர்வு யோசனை தமிழர்களின் உரிமைகளைத் தாராளமாக வழங்குகிறது என்று ஸ்ரீலங்கா அரசு கூறுவதை வெளிநாடுகளுக்கு உறுதிப்படுத்தும் ஏற்பாடாக இதனை நோக்கலாம். அவ்வாறு உறுதிப்படுத்துவதன் மூலம் சந்திரிகா தமிழருக்கு எதிராக நடத்தும் போருக்கு ஆயுதங்கள் ஏனைய இராணுவ உதவிகளை அரசுக்கு வழங்குவதற்கு வெளிநாடுகளுக்கு ஊக்கமளிப்பதாகவும், தூண்டுதல் அளிப்பதாகவும் அமையும்.

சிங்களவர்களே சிங்கள அரசுக்கு எதிராக வெளிநாட்டில் பேரணி நடத்துவது ஸ்ரீலங்காவிலும் சிங்களவர்களை தீர்வு யோசனையைக் கண்டித்துப் பேரணிகளை நடத்துவதற்குத் தூண்டுவதாக அமையும். அத்தகைய ஆர்ப்பாட்டங்கள் குழப்பங்களாக மாறி, தீர்வு யோசனையை வாபஸ் பெறுமாறு அரசை நிர்ப்பந்திப்பதற்கு வழியிட்டுச் செல்லும்!

மொத்தத்தில் சந்திரிகாவின் தீர்வு யோசனையை வாபஸ் பெறச் செய்து போரைத் தொடர்வதற்கு அரசுக்கு வழி செய்து கொடுப்பதே இந்த ஆர்ப்பாட்டத்தின் நோக்கம். ஒரு கல்லில் இரு மாங்காய்களை விழுத்தும் வகையில் பேரணி ஆழமாகத் திட்டமிட்டு நடத்தப்பட்டிருக்கிறது!

# தளபதி ஜெரியின் சிபார்சுக்கமைய ராணுவ மேல் மட்டத்தில் மாற்றங்கள்

## சந்திரிகா நடவடிக்கை

கொழும்பு, ஓக. 16

ஸ்ரீலங்கா இராணுவ மேல் மட்டத்தில் மீண்டும் மாற்றங்கள் கொண்டுவரப்படுகின்றன.

இராணுவத் தளபதி ஜெரி டி. சில்வாவின் சிபார்சுக்கமைய மாற்றங்களை மேற்கொள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

முப்படை நடவடிக்கைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ரொஹான் தளுவத்தவின் கீழ் பிரதி முப்படை நடவடிக்கை தளபதியாக யாழ் பிராந்திய தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய நியமனம் செய்யப்படுகிறார்.

ரொஹான் தளுவத்தவின் கீழ் பிரிகேடியர் கருணாதிலக, பிரிகேடியர் நீல் டயஸ், பிரிகேடியர் ஜனக பெரேரா ஆகியோர் செயற்படுவர்.

மட்டக்களப்பில் நிலை கொண்டுள்ள இராணுவ 2 ஆவது டிவிஷன் தளபதியாக பிரிகேடியர் ஜே சிந்த கஜுநாயகவும், பலாலி, தீவுப் பகுதி இராணுவ தளபதியாக பிரிகேடியர் சோமதாஸ ஹப்பு ஆராச்சியும், பனாகொடையில் உள்ள முதலாவது டிவிஷன் தளபதியாக பிரிகேடியர் அசோக சில்வாவும், கொழும்பில் உள்ள 12 ஆவது பிரிகேட் தளபதியாக பிரிகேடியர் நிஹால் மாரப்பனவும், இராணுவ தலைமையகத்தின் பொது அதிகாரிகள் இயக்குநராக பிரிகேடியர் சிறி பீரிஸும் நியமனமாகின்றனர். (ஒ-3)

## ஊர்காவல் படையில் 12 ஆயிரம் பேர்

கொழும்பு, ஓக. 16

ஊர்காவல் படைக்கு வடக்கு கிழக்கு, வடமத்திய மாகாணங்களிலிருந்து 12 ஆயிரம் இளைஞர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அனுராதபுரம், வவுனியா, பொலன்னறுவை திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், அம்பாறை பொலீஸ் பிரிவுகளிலிருந்து இவர்கள் சேர்க்கப்பட்டனர் என்று ஊர்காவல் படையின் துணைத்தலைவர் உபாலி டி சில்வா கூறியுள்ளார்.

சுமார் 100 பெண்களும் இப்படையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். [இ-ஏ]

## நீர்கொழும்பில் 43 தமிழர் கைது

நீர்கொழும்பு, ஓக. 16

நீர்கொழும்பில் 43 தமிழர்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். இவர்களில் மூவர் பெண்கள் ஆவர். (க)

## அம்பாறைப் பகுதியில் தமிழரின் வீடுகள் தீக்கிரை

### முஸ்லீம் ஊர்காவலர் அட்டகாசம்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சேனைக் குடியிருப்பு கிராமத்தில் உள்ள தமிழ் மக்களின் வீடுகள் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் கொள்ளையடிக்கப்பட்ட பின் எரிக்கப்பட்டு நாசமாக்கப்பட்டன.

நான்கு வீடுகள் முற்றாகத் தீயில் எரிந்து நாசமாகியதாகவும், 20 வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து 100க்கும் மேற்பட்ட தமிழர்கள் வீடுகளை இழந்து பாண்டிருப்பு, துறைநீலாவணை, 5 ஆம் கொலனி ஆகிய கிராமங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

சுமார் 14லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட சொத்துக்கள் நாசமானதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3 6)

## மட்டு. வாகரைப் பகுதியில் விமானக் குண்டு வீச்சு

### ஒருவர் பலி; மற்றொருவர் காயம்

மட்டக்களப்பு, ஓக. 16

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரைப் பிரதேசத்தில் கடந்த புதன்கிழமை நடந்த விமானத்தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் காயமடைந்தார்.

வேலாயுதம் நாகதேவன் (26 வயது) என்பவரே கொல்லப்பட்டவர் ஆவார் ஏரம்பமூர்த்தி அசோகன் [21 வயது] இச்சம்பவத்தில் காயமடைந்துள்ளார்.

அண்மைக்காலத்தில் வாகரைப் பிரதேசம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டின்கீழ் வந்துள்ளது தெரிந்ததே. (ஒ-3)

## பஸ் மீது துப்பாக்கிச் சூடு; 3 ராணுவத்தினர் காயம்

### திருமலைப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 16

திருகோணமலையில் இராணுவத்தினர் சென்ற பஸ் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் மூன்று இராணுவத்தினர் காயம் அடைந்தனர்.

சிங்களக் குடியேற்றப் பகுதியான சேருவிலவில் பௌத்த விகாரையில் இருந்து திருகோணமலைக்குச் சென்று கொண்டிருந்த இராணுவத்தினரின் பஸ் மீதே புலிகள் இத்தாக்குதலை நடத்தினர் [ஒ-3]

## அரச அதிபர் பெயரில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனைத் தொடர்ந்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு உணவுக் கப்பல்களுக்கு வழங்கும் பாதுகாப்பை நிறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதம் 14 ஆம் திகதியன்று காங்கேசன்துறை வந்திருந்த 'லங்கா முடிதா' கப்பலில் யாழ். அரச அதிபருக்கென 2,600 மெற்றிக் தொன் உணவு மற்றும் அத்தியாவசிய பாவனைப் பொருள்கள்—

புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சினால் கொழும்பில் வைத்து ஏற்றப்பட்டதாக பொருள்கள் விவரப் பட்டியலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதனால் வழமைப் பிரகாரம் செஞ்சிலுவைக் குழு இக்கப்பலுக்குப் பாதுகாப்பு வழங்கியிருந்தது.

ஆனால் அக்கப்பலில் இருந்து படையினர் 250 மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை காங்கேசன்துறையில் வைத்து இறக்கினர்.

இது குறித்த சர்ச்சையைத் தொடர்ந்து கப்பலில் இருந்த செஞ்சிலுவைச்சங்க அதிகாரி வேறு கப்பலில் பருத்தித்துறை வந்தார். அவர் இறங்கி வந்த பின்னர் 'பஜிரோ' வாகனங்கள் இறக்கப்பட்டதாகவும்—

யாழ். அரச அதிபருக்கென கொண்டுவரப்பட்ட (மிகுதிப்) பொருள்களுடன் கப்பல் கொழும்பு திரும்பியதாகவும் — இப்போது தெரியவருகிறது.

கொழும்பு திரும்பிய 'லங்கா முடிதா' வில் மேலும் உணவுப் பொருள்கள் ஏற்றப்பட்டு, பாதுகாப்பை எதிர்பார்த்து துறைமுகத்தில் இப்போது வடக்கே வருவதற்காகக் காத்து நிற்பதாகவும் கொழும்பிலிருந்து நேற்றுக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (அ-8)

## அளவெட்டியில் புலிகள் ஷெல்தாக்கு

## இராணுவ மேஜர் உட்பட 10 படையினர் காயம்

யாழ்ப்பாணம், ஓக. 16

கடந்த வெள்ளியன்று அளவெட்டிப் பகுதியில் விடுதலைப்புலிகள் நடத்திய ஷெல் தாக்குதலில் மேஜர் தர இராணுவ அதிகாரி ஒருவர் உட்பட 10 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

அளவெட்டி மேற்குப் பகுதியில் இராணுவ அணி ஒன்று காவலரண் அமைக்கும்வேலையில் ஈடுபட்டிருந்த போது அந்த அணி மீது விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதலை நடத்தினர் இத்தாக்குதலின் போது 10 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்.

இவர்களில் ஒருவர் இராணுவ இலகு காலாட் படையின் பத்தாவது பட்டாலியன் தளபதி மேஜர் சந்தான விமலசிறி ஆவார்.

இவர் பலாலி தள மருத்துவமனையில் தீவிர சிகிச்சையின் பின், தேறி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. [ஒ-3]

## நடவடிக்கை எடுக்க முடிவு

விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்கள் மீண்டும் நாடு திரும்பாமல் அந்தந்த நாடுகளிலேயே தங்கிவிடும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இவ்வாறு வெளிநாடு சென்று மீண்டும் நாடு திரும்பாமல் அங்கேயே தஞ்சம் பெற்று அல்லது தலைமறைவாகி அந் நாடுகளிலேயே தங்கி விடுவோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க விளையாட்டுத்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது.

## மட்டக்களப்பு பகுதிகளில் 19 மாதங்களில் மட்டும் 175 பொதுமக்கள் பலி!

மட்டக்களப்பில் படையினரின் தாக்குதல் சம்பவங்களில் கடந்த 19 மாதங்களில் மட்டும் 175க்கும் அதிகமான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 700 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் 30 வீதமானவர்கள் அங்கவீனமுற்றும்— 40 வீதமானவர்கள் உடல் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகவும்— புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

3 ஆம் ஈழப்போரின் பின்னரே அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் கடந்த 17 மாதங்களிலும் 703 அகாலமரணங்கள் சம்பவித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-3]

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

### கண் கோடி வேண்டுமே

நல்லைக் குமரனின் நாமம் கூற
இல்லைப் பிணியென்று நீயாறு
தொல்லை யரக்கர்கள் தொடை நடுங்கி ஓட
தோகை மயிலோனே எழுந்தோடி வா!
சொல்லை "முருகென்ற" சொல்லை நாம்
சொல்ல வினையெலாம் பொடிபடுமே
கல்லைக் கனியாக்கும் கந்தன் முகம்
காணக்கண் கோடி வேண்டுமே!

— நயினை. ஐ. பாஸ்கரன்

### எமைக்காத்து அருளுவாயே!

வண்டோசை மறையாத வளஞ்சூழ் நல்லை
வடிவழகா! வண்டமிழர் வடிவா லவனே
உண்டோதா னுனைப்போலத் தெய்வ மிந்த
உலகத்திற் பிறவியெனும் உறவைப் போக்க
எண்டோளர் நுதற்பொறியி லுதித்த கோவே
ஏந்திழையா ரிருபுறமும் இணைந்து வரக்
கண்டோர்க்கோர் குறையுண்டோ கதிர்வே லவனே!
கண்மணியே எமைக்காத்து அருளுவாயே

— நாயன்மார்கட்டு இ. குகதாசன்

# மேலும் மூன்று சடலங்கள் தியவன்ன ஓயாவில் மீட்பு!

கொழும்பு, ஓக. 16

நாடாளுமன்றத்துக்கு அருகில் உள்ள தியவன்ன ஓயா வாவியில் இருந்து கடந்த திங்கட்கிழமை மூன்று சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கண்டெடுக்கப்பட்ட மூன்று சடலங்களும் ஆண்களின் சடலங்கள்.

உடைந்த உலோகத்துண்டுகள், கற்கள் ஆகியவற்றால் நிரப்பப்பட்ட சாக்கு மூடைகள் அந்த நிர்வாணமான உடல்களின்மீது கட்டப்பட்டு, அவை வாவியில் வீசப்பட்டுள்ளன. குறைந்தது மூன்று நாட்களாவது அந்தச் சடலங்கள் வாவியில் இருந்திருக்கின்றன.

இம்மாதத்தில் இந்த வாவியில் இருந்து வேறு இரு சடலங்கள் ஏற்கனவே கண்டெடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

மொத்தம் 30 சடலங்கள் வாவிகள், ஆறுகளில் இருந்தும், பாலங்களில் இருந்தும் கண்டு எடுக்கப்பட்டுள்ளன.

அவை பெரும்பாலும் மிக அழுகிய நிலையில் காணப்பட்டன. சில வேண்டும் என்றே சிதைக்கப்பட்டுள்ளன.

இதுவரை ஒரேயொரு சடலம் தான் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்பட்ட சடலம் தமிழருடையது. அவர் ஒரு வீடியோ கடையில் வேலை செய்தவர். மற்றச் சடலங்களில் பல தமிழரின் சடலங்களாக இருக்கக்கூடும் என நம்பப்படுகிறது.

கடந்த ஏப்ரல் முதல் 40 தமிழர்கள் காணாமல் போயிருப்பதற்கும்—இப்போது கண்டெடுக்கப்படும் சடலங்களுக்கும் இடையில் ஏதாவது தொடர்பு உள்ளதா என்பது தெரியவில்லை.

இப்படி காணாமற் போனவர்களில் பாதிப்பேர் கொழும்பில் இருந்தே காணாமற் போனார்கள்]

(ஓ-3)

## பணக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஓக. 16

பின்வருவோருக்கான ஒரு தொகைப் பணம் தம்வசம் இருப்பதாகவும் —

சம்பந்தப் பட்டவர்கள் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு பலாலி வீதி, கந்தர்மடத்தில் உள்ள வருவாய் பகுதிச் செயலகத்துக்கு வந்து பணத்தைப் பெற்றுக்கொள்மாறும் —

நிதித்துறை நடுவப் பணியகம் அறிவித்துள்ளது.

பின்வருவோர் அடையாள ஆவணங்களுடன் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நல்லதம்பி நடராசா அல்லது சிவபாக்கியம் சிவகுரு கடையடி ஏழாலை மத்தி, ஐ. இராஜேந்திரன் சிவகுரு கடையடி, ஏழாலை மத்தி, நாகநாதன் சிதம்பரப்பிள்ளை வாழை அம்மன் கோவிலடி, அராலி கிழக்கு, செல்வி தர்சினி அமிர்தநாயகம் சென் மேரிஸ் வீதி, பண்டத்தரிப்பு, பூபதி சுப்பிரமணியம் வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, வை. அம்பிகாவலன் சரவணன் இல்லம் சுன்னாகம் கிழக்கு, கணேசலிங்கம் சின்னராசா சகிதா நகைமாளிகை சுன்னாகம், திருமதி பத்மவசந்தி மகேந்திரன் கல்வளை, சண்டிலிப்பாய் மத்தி. கிருஷ்ணபிள்ளை ராஜலிங்கம் பார்வதிப்பிள்ளை கட்டுடை வைரவர் கோயில் அருகில் மானிப்பாய். (ஓ)

### கச்சதீவுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய சுதந்திர தினமான நேற்று கச்சதீவுக்குப் படகுகளில் சென்று அங்கு இந்தியக் கொடியை ஏற்றப் போவதாக தமிழ்நாட்டின் பிரதான எதிர்க்கட்சிகளில் ஒன்றான பாட்டாளி மக்கள் கட்சி அறிவித்திருந்தது தெரிந்ததே. [இ ஐ]


## "வேரும் விழுதுகளும்"
## கல்வியியற் கண்காட்சி

இடம்: நுணாவில் கண்ணகை அம்மன் கோயிலடி

காலம்: 15 - 08 - 95 — 25 - 08 - 95 வரை

பார்வையாளர்களுக்கான அனுமதியும் பின்னர் பாடசாலைகளுக்கான அனுமதியும் வழங்கப்படும்.

செஞ்சோலை மகளிர் வித்தியாலயம்.

(38039)


## மரண அறிவித்தல்கள்

### கார்த்திகேசு சண்முகம்

கைதடி தெற்கைச் சேர்ந்த கார்த்திகேசு சண்முகம் காலமாகிவிட்டார். அன்னார் அமரர்களான கார்த்திகேசு-சுந்தரவல்லியம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், அமரர்களான சங்கரப்பிள்ளை-விசாலாட்சி தம்பதிகளின் அருமை மருமகனும், திருமதி தங்கம்மாவின் அன்புக் கணவரும், கமலேஸ்வரி நித்தியானந்தன், [ஆசிரியை-மன்னார்], சிவகுமாரன், செல்வகுமாரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நித்தியானந்தன் (A O நீர்வழங்கல் சபை மன்னார்), அன்பு மாமனாரும், காயத்திரி, சிவாகரன் ஆகியோரின் அருமைப் பாட்டனும், அமரர்களான ஆறுமுகம் [ஸிளாக்கர்], சின்னத்தம்பி (உப. தபாலதிபர்), சின்னப்பிள்ளை சுப்பிரமணியம் (மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி திருப்பதிப்பிள்ளை ஆறுமுகம், திருமதி தங்கம்மா சின்னத்தம்பி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் (மலேசியா), ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 16-08-95] புதன் பகல் 10-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். தயவு செய்து உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

கைதடி தெற்கு. (38043)

### திருமதி வள்ளிநாயகி சிவலிங்கம்

மல்லாகம், நீதிமன்ற வீதியில் வசித்து வந்தவரும், தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமான திருமதி வள்ளிநாயகி சிவலிங்கம் 14 - 08 - 95 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கனகரட்ணம் சிவலிங்கத்தின் அன்பு மனைவியும், சத்தியமூர்த்தி [விஜயா ஹாட்வெயர்ஸ், மல்லாகம்], விஜயலட்சுமி [கொழும்பு], சத்தியகுமார் [சுவீடன்], சத்தியபாலன் [சுவிட்சர்லாந்து], ஜெயகுமார் [நோர்வே], விஜயராஜன் [கனடா], கலைவாணி[கனடா], காலஞ்சென்ற சிவசக்தி[கனடா], சிறிகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும், சியாமளாதேவி [ஆசிரியை, மல்லாகம் மகாவித்தியாலயம்], ஜெயகாந்தன் (கொழும்பு), ரோகினி (சுவீடன்), நந்தினி [சுவிஸ்], சிவாஜினி [நோர்வே], சித்திரா (கனடா), கனகராஜ் (கனடா], ரவிதாஸ் (கனடா), வாசுகி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17 - 08 - 95 அன்று கொழும்பில் அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. சத்தியமூர்த்தி
(மகன்)

முகவரி:
உதயதாரகை,
மீசாலை மேற்கு,
மீசாலை.

(38045)

### வேலூர்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாவட்ட தலைநகரான — வேலூரில் உள்ள மிகப் பழமை வாய்ந்த கோட்டையான "திப்புமஹால்" தடுத்து வைக்கப்பட்டிருந்த ஈழத் தமிழர்களே தப்பி ஓடினர்.

இந்த தடுப்பு முகாமில் மொத்தம் 844 ஈழத் தமிழர்கள் கடந்த நான்கு வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

நீண்ட காலமாக பூட்டி வைக்கப்பட்டிருந்த நிலவறை ஒன்றுக்குள் அவர்களில் சிலர் இரண்டொரு மாதங்களுக்கு முன் புகுந்ததாகவும்—

அங்கு மூன்று அடிக்கு மூன்று அடி அளவுள்ள நீண்ட சுரங்கப்பாதை ஒன்றை பல நாட்களாகக் கஷ்டப்பட்டு தோண்டியதாகவும்—

நேற்று அதிகாலை இந்தச் சுரங்கப்பாதை ஊடாக அவர்கள் தவழ்ந்து சென்று வெளியேறியதாகவும்—

செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து தப்பிச்சென்றோரை தேடிக் கண்டுபிடிப்பதற்காக தமிழகத்திலும், அண்டை மாநிலங்களின் எல்லைப்புறங்களிலும், தமிழக கடற்கரைப் பிரதேசங்களிலும் தீவிர தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.

தமிழகம் முழுவதிலும் காவல்துறையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். கடலோரப் பாதுகாப்புப் படையும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

ரயில் நிலையங்கள், ஹோட்டல்கள், விடுதிகள், முக்கிய போக்குவரத்து நிலையங்கள் ஆகியவற்றில் தேடுதல் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து தமிழக தலைமை நீதிபதியின் தலைமையில் உடனடி நீதி விசாரணைக்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா காவல்துறை அதிகாரிகளுடன் அவசர ஆலோசனைகளை நடத்தினார்.

சம்பந்தப்பட்ட தடுப்புக் காவல் நிலையத்துக்கு பொறுப்பான சிறைத்துறை துணைப் பொறுப்பாளர், அம்பேத்கார் மாவட்ட சிறைத்துறைப் பொறுப்பாளர், மற்றும் சிரேஷ்ட சிறைத்துறை அதிகாரிகள் சிலர் ஆகியோர் தடுப்புக் காவல் கைதிகள் தப்பியோடிய சம்பவத்தை அடுத்து தற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

தப்பியோடியோர் பற்றிய விவரங்கள் மற்றும் தகவல்களைத் தருவோருக்கு தலா பத்தாயிரம் ரூபா வழங்கப்படும் என காவல்துறை அறிவித்தது.

இச்சம்பவம் குறித்து இந்திய மத்திய அரசின் உள்துறைச் செயலாளர் தமிழக மாநில அரசுடன் தொடர்பு கொண்டு நிலைமைகளை ஆராய்ந்தார்.

[உ-க-எ-3-6]

#### குண்டு வெடிப்பை அடுத்து

## நடைபாதை வியாபாரம் கொழும்பில் திடீர் தடை!

மேல் மாகாண முதலமைச்சரின் அலுவலகம் முன்பாக கடந்த வாரம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்பு நகரிலும் சுற்றுப் பகுதிகளிலும் நடைபாதை வியாபாரம் முற்றாக தடை செய்யப்பட்டு கடைகள் அகற்றப்பட்டு வருகின்றன.

கொழும்பு குண்டு வெடிப்பில் இளநீர் விற்கும் வண்டில் பயன்படுத்தப்பட்டதால், பொலீஸார் பாதுகாப்பு நிமித்தம் நடைபாதைகளில் வியாபாரம் செய்வதை தடை செய்துள்ளனர்.

கொழும்பு. பொரளை, வெள்ளவத்தைப் பகுதிகளில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்ட பலரை பொலீஸார் விசாரணை செய்ததுடன், பலரை கைது செய்ததாகவும் தெரியவந்தது. [ஓ-3]

## படையினரின் வலையில் பிச்சைக்காரர்களும்!

கொழும்பு, ஓக. 16

கொழும்பில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை அடுத்து நகரில் உலாவித் திரியும் பிச்சைக்காரர்கள் மீதும் பாதுகாப்புப் படையினரின் பார்வை திரும்பியுள்ளது.

நகரில் காணப்படும் பிச்சைக்காரர்கள் இனி சோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

கொழும்பில் பல குண்டுகளை வெடிக்கச் செய்ய விடுதலைப் புலிகள் திட்டம் தீட்டியிருப்பதாகத் தகவல் கிடைத்திருப்பதை அடுத்தே— சோதனை நடவடிக்கைகள் பல விதத்திலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அவதானிகள் கூறுகின்றனர்.

நகரில் தினமும் வீதித்தடைகள் போடப்பட்டு சோதனை நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும்—

சந்தேகத்துக்கு உரியவர்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகவும் பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஜீ. பி. கொட்டகதெனிய நேற்றுத் தெரிவித்தார்.

## யாழ். குடாநாட்டில் 3 ஆவது கல்வி வலயம்

யாழ்ப்பாணத்தில் மூன்றாவது கல்வி வலயத்தை அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் தற்சமயம் உள்ள இரு கல்வி வலயங்களில் சில பகுதிகளைப் பிரித்து மூன்றாவது வலயம் அமைக்க மாகாண கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

மூன்றாவது வலயத்தை அமைப்பது, அந்த வலயத்தை நிர்வகிக்கும் ஊழியர்களை இடமாற்றம் செய்வது தொடர்பான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விரைவில் இந்த வலயம் செயற்பட ஆரம்பிக்கும்.

### அதிகாரப்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளது.

ஸ்ரீலங்காவின் இனப்பிரச்சினைக்கு சமாதான முறையில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நெடுநாளைய நிலைப்பாடாகும் —

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் உன்னிப்பாகப் பரிசீலனை செய்ய வேண்டும்" என்று வெளியுறவு அமைச்சு அதிகாரி மேலும் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தீர்வு யோசனையை விடுதலைப் புலிகள் பரிசீலனை செய்ய வேண்டும் என்ற அர்த்தத்திலேயே அந்த அதிகாரி இவ்வாறு கூறியதாக ஏ.எவ்.பீ. செய்தியில் விமர்சிக்கப்பட்டுள்ளது. (அ)

### செஞ்சிலுவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாக நிவாரணம் வழங்கப்படவில்லை என்றும்—

பாண் தயாரிக்க தேவையான மாவும் மற்றும் சீனியும் 18 ஆம் திகதி வரைக்கும் போதுமான அளவே கையிருப்பில் உள்ளதாகவும்—

இது தவிர்ந்த பொருள்கள் எதுவும் செயலக கையிருப்பில் இல்லை என்றும் — அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ-3-6]

### 6 பேர் நேற்று....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்தனர். அவர்களில் இருவர் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டனர். சயனைட் உட்கொண்ட மற்றொருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டார். [உ-க-எ-3-6)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 16 - 08 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.